بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)**

**இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாயிலில் 07.08.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 07 August 2015 (Tamil)**

**மனிதன் எவருக்காவது ஆகிவிட விரும்பும் இயல்பை அல்லாஹ் அவனிடம் வைத்துள்ளான். அது அல்லாமல் அவனுடைய உள்ளத்திற்கு ஆறுதல் கிடைப்பதில்லை. ஒருவருக்காக ஆகிவிடுவதற்கான மிகச் சிறந்த வழிமுறை அதனால் உலகம், மார்க்கம் ஆகிய இரண்டும் கிடைக்க வேண்டும். மனிதன் அல்லாஹ்வுக்காக ஆகி விட வேண்டும்; அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.**

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்களின் சம்பவங்களைக் படிக்கும்போது அல்லது கேட்கும்போது அவர்களின் நல்ல இயல்பு, உண்மையை கண்டறிவதற்காக அவர்களிடம் இருந்த துடிப்பு, பொருளையும் உயிரையும் தியாகம் செய்வதற்கு அவர்களிடம் இருந்த துடிப்பு முயற்சி, அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கொண்டிருந்த அன்பு நேசம் ஆகியவற்றை தமது ஆர்வம், புரியும் திறன் ஆகியவற்றிற்கேற்ப வெளிப்படுத்துவதன் தகுதி ஆகியவை நமக்குத் தெரிய வருகின்றன. சுருக்கமாக, இவர்கள் அவ்வலீன் (முந்தைய) மக்களுடன் இணைவதற்காக தத்தமது தகுதிக்கேற்ப தமது உரிமைகளை நிறைவேற்றுபவர்களாக மாறுவதற்கு முயற்சி செய்பவர்களாக இருந்தவர்களாவர். ஒவ்வொருவருக்கும் தனக்கென ஒரு வழிமுறை இருந்தது. அவர்களைப் பார்ப்பவர்களும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும் அந்த சஹாபிகளின் செயல்முறை, நல்லொழுக்கம், பண்பு ஆகியவற்றிலிருந்து தத்தமது தகுதிக்கேற்ப அறிவுரையைப் பெற்றனர். அல்லது சில விஷயங்களிலிருந்து முடிவு எடுத்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், தாமே சஹாபிகளில் ஒருவராக இருந்தார்கள். அநேகமாக எல்லா சஹாபாக்களிடமிருந்தும் அல்லது யாருடைய சம்பவங்களை அவர்கள் கூறுகிறார்களோ அவர்களுடன் அன்னாருக்கு சொந்த தொடர்பும் இருந்தது. அவர்கள் சஹாபாக்களை சான்றாக எடுத்துரைத்து அவற்றிலிருந்து முடிவெடுத்து அறிவுரை கூறும்போது அந்த அறிவுரைகளினால் உள்ளத்தில் ஒரு குறிப்பிட்ட தாக்கமும் ஏற்படுகிறது. சில நேரத்தில் நாம் ஒரு சம்பவத்தினால் ஓர் அம்சத்தை எடுக்கிறோம். ஆனால் சிந்தித்துப் பார்க்கும்போது அதில் பல அம்சங்கள் தென்படுகின்றன. ஒரே சம்பவம் பல்வேறு கோணத்தில் அறிவுரையாக மாறுகின்றன.

**உதாரணமாக மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்களின் சம்பவம்.** அதை முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது கோணத்தில் எடுத்து வைத்துள்ளார்கள். மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை முதன் முதலில் சந்திக்க வந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அது ஒரு

நகைச்சுவைதான். அவர்கள் கூறுகிறார்கள்: நான் காதியான் வந்தேன். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் சென்றிருந்தார்கள் எனவே நான் அங்கு சென்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கியிருந்த வீட்டில் ஒரு தோட்டம் இருந்தது. ஹாமிது அலி சாஹிப் வாசலில் அமர்ந்திருந்தார். அவர் என்னை உள்ளே செல்வதற்கு அனுமதியளிக்கவில்லை. ஆனால் நான் மறைமுகமாக வாசல் வரை சென்று விட்டேன். மெதுவாக நான் கதவைத் திறந்து பார்த்தபோது ஹஸ்ரத் சாஹிப் உலாவிக்கொண்டிருந்தார்கள். மிக விரைவாகவும் நீண்டதாகவும் அடியெடுத்து வைத்தார்கள். மவ்லவி புர்ஹானுத்தீன் கூறுகிறார்: நான் உடனே பின்னால் திரும்பி விட்டேன். **அதி விரைவாக காலெடுத்து வைத்து உலாவும் இவர் உண்மையாளர்தான்; சீக்கிரம் இவர் ஒரு காலத்தைக் கடந்து, தான் செல்ல வேண்டிய இடத்தை அடைபவராவார். எனவேதான் இவர் நீண்ட தூரம் காலெடுத்து வைத்து நடந்து கொண்டிருக்கிறார் என புரிந்து கொண்டேன்.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர் வஹ்ஹாபியாக இருந்தும் இவ்வாறு எண்ணியது ஆச்சரியமான விஷயம்தான். மற்றபடி (வஹ்ஹாபியாகிய) அவர்கள் பொதுவாக வரட்டு வாதம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். கடுமை காட்டக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இங்கே பாருங்கள். அல்லாஹ் மவ்லவி சாஹிபுக்கு உண்மையை அடையாளம் காண வைக்கவிருந்தான். அவருக்கு திருக்குர்ஆனின் சான்றைப் புரிவது பற்றிய சிந்தனையும் வரவில்லை; ஹதீஸின் சான்றைப் பற்றி புரிவது பற்றிய சிந்தனையும் வரவில்லை; வேறு எந்தவிதமான சான்றைப் புரிவதற்கான சிந்தனையும் வரவில்லை.

எப்படியிருந்தபோதிலும் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்களின் நல்ல இயல்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரைவாக நடப்பதையே உண்மைக்கு அடையாளமாகக் கருதிக் கொண்டார்கள். அல்லாஹ்வின் சிறப்பான பார்வை மவ்லவி சாஹிபின் மீது இருந்தது. இல்லையென்றால் சான்றுகளைக் கேட்டும், அடையாளங்களைப் பார்த்தும் ஒப்புக்கொள்ளாத மக்களும் இருக்கிறார்கள். எல்லா வஹ்ஹாபியும் கடுமையான உள்ளம் கொண்டவர்கள் என நாம் கூறுவதும் சரியன்று. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை ஏற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் ஆப்பிரிக்காவில் இருக்கின்றனர். அவர்களிடம் பைஅத் செய்திருக்கின்றனர். வஹி, இல்ஹாமின் தேவை பற்றிய உணர்வு அவர்களுக்கு எல்லா நேரமும் ஏற்பட்டது. வலிமார்களும், நபிமார்களும் மழையைப் போன்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் வருவதனால் பூமி பச்சைப் பசுமையாகிறது. எனவே ஆன்மீக பச்சைப் பசுமைக்கு இறையறிவிப்பு தொடர்வதும் அவசியமானதாகும் என்பது (ஆப்பிரிக்கர்களாகிய) அவர்களுக்கு தெரிய வந்தது.

**அப்துர் ரஹ்மான் மத்ராஸி அவர்களைப் பற்றிய ஒரு சம்பவம்.** அவர்களிடம் மிகப் பெரும் கலப்பற்ற தன்மை இருந்தது. நன்கு தப்லீக் செய்பவராக இருந்தார்கள். ஆரம்பத்தில் அவர்களின் பொருளாதார நிலை மிகவும் நன்றாக இருந்தது. அந்த நேரத்தில் அவர்கள் மார்க்கத்திற்காக நல்ல தியாகம் செய்து வந்தார்கள். மாதா மாதம் 300, 400, 500 ரூபாய் சந்தா அனுப்பி வந்தார்கள். இறை நியதிக்கேற்ப சில தவறான தீர்ப்புகளின் காரணமாக அவர்களின் வியாபாரம் முற்றிலும் நாசமாகி விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவரைப் பற்றித்தான் இவ்வாறு இல்ஹாம் வந்தது:

**‘‘சீர்குலைந்து போன வேலையை சரிசெய்பவன் அந்த இறைவன்தான். உருவாக்கியிருந்ததை உடைப்பவனும் அவன்தான். இதன் இரகசியத்தை யாராலும் புரிய முடியாது.’’**

இந்த இறையறிவிப்பு இறங்கியபோது இல்ஹாமின் முதல் வரியின் பக்கமே

கவனம் சென்றது. சேட் சாஹிபின் வியாபாரம் சரியாகி விடும் எனக் கருதப்பட்டது. இரண்டாவது வரியின் பக்கம் எவருக்கும் கவனம் செல்லவில்லை. அதாவது, முதலில் வேலை சரியாகி விடும்; பிறகு சீர்குலைந்தும் விடும். இந்த இல்ஹாம் இறங்கிய போது வியாபாரம் பிறகு ஒளிமயமாகியது. நிலைமை நன்றாகி விட்டது. ஆனால் மீண்டும் நிலைமை மோசமாகி விட்டது. சில நேரத்தில் உண்பதற்கும், குடிப்பதற்கும் எதுவும் அவரிடம் இல்லாத அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது. ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கனிவான நேசத்துடன் அது பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: சேட் அப்துர் ரஹ்மான் ஹாஜி அல்லா ரக்கா அவர்களின் கலப்பற்ற மனம் எவ்வளவு அதிகமாகியிருந்தது! அந்த சந்தர்ப்பத்தில் 500 ரூபாய் அவர்கள் அனுப்பியிருந்தார்கள். அவருடைய கஷ்டத்தைப் பார்த்து ஒரு நண்பர் 2000, 3000 ரூபாய் கொடுத்து ஏதாவது வியாபாரத்தை ஆரம்பியுங்கள் அல்லது பாத்திரக் கடையை திறங்கள் எனக் கூறினார். அதிலிருந்து 500 ரூபாயை அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அனுப்பி, நீண்ட காலமாக நான் சந்தாவை அனுப்ப முடியாதிருந்தது. இறைவன் எனக்கு ரூபாயைத் அனுப்பியிருக்கும்போது அதிலிருந்து நான் மார்க்கத்திற்காக எதுவும் கொடுக்காமல் இருப்பதை எனது தன்மான சகித்துக் கொள்ளவில்லை! என மூதினார்கள். சுருக்கமாக, மார்க்கத்திற்காக அவருடைய கலப்பற்ற தன்மை அதிகமாக இருந்தது.

ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தைப் படம்பிடித்துக் காட்டியவாறு கூறுகிறார்கள்: அதாவது அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்கள்; இந்த வகையில் அவர்கள் நபியும் ரஸூலும் ஆவார்கள்; அவர்களுக்கு இந்த அந்தஸ்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக இருந்ததனால் கிடைத்தது; தனது சொந்த தகுதியினால் அல்ல. அப்படியிருந்தும் முஸ்லிம்களின் பெரும்பான்மையினர் அவர்களுக்கு எதிரியாகி விட்டனர். பிறகு அவர்கள் எல்லா மார்க்கத்தை சேர்ந்தவர்களுக்கும் அறைகூவல் விடுத்ததனால் கிறித்தவர்களும், இந்துக்களும் அன்னாருக்கு எதிரிகளாகி விட்டனர். அன்னாரை மிகவும் அவமானப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டன. எதுவரை என்றால் அரசு விடுமுறைகளைத் தவிர மற்ற நாட்களில் தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை நாள்தோறும் நீதிமன்றத்தில் பல மணி நேரங்கள் நிற்க வேண்டியது வந்தது. ஒரு நாள் குற்றவியல் நடுவர் (Magistrate) தனது பகைமையின் காரணமாக அவர்களுக்கு தண்ணீர் குடிக்கக் கூட அனுமதியளிக்கவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: **இன்று நாம் அந்த காலத்தை மறந்து விட்டோம். ஆனால் அந்தக் காலத்து கலப்பற்ற பற்று கொண்டவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய சோதனைக் காலமாக இருந்தது.** அவர்கள் ஒரு பக்கம் மன்னர்கள் உமது ஆடையிலிருந்து அருள்களைத் தேடுவார்கள்; உம்மை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அற்ப சமுதாயமாக மாறி விடுவார்கள் என்ற இறைவாக்குறுதியை கேட்டு வந்தனர்; மறுபக்கம் சாதாரண 400, 500 சம்பளம் வாங்கும் ஓர் இந்து குற்றவியல் நடுவர் (Magistrate) அவர்களை நிற்க வைக்கிறார்; தண்ணீர் குடிக்கக் கூட அனுமதி அளிக்கவில்லை என்பதைப் பார்த்து வந்தனர். எதுவரை என்றால், நின்று நின்று அவர்களுக்கு தலைசுற்று வந்தது. கால்கள் களைப்படைந்தன. **அல்லாஹ் எவரைப் பற்றி இந்த அளவுக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளானோ அவர் இவர்தானா என பலவீனமான ஈமான் உடையவர்கள் ஆச்சரியமடைந்திருப்பார்கள்.** சுருக்கமாக இவையும் சோதனைகளாக இருந்தன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு வழக்கு பற்றி தீர்ப்பு கூறப்படவிருந்த அந்த நாள் எனக்கு நினைவில் இருக்கிறது. நமது ஜமாஅத்தில் ஒரு நண்பர் இருந்தார். அவர் பேராசிரியர் என அழைக்கப்பட்டு

வந்தார். தீர்ப்பு கூறப்படவிருந்த நேரம் வந்தபோது குற்றவியல் நடுவர் (Magistrate) கண்டிப்பாக தண்டனை கொடுப்பார்; சிறைப்பிடிப்புக்கான தண்டனையாக இருப்பது கூட சாத்தியமானதுதான் என மக்கள் உறுதி கொண்டனர். மறுபக்கம் கலப்பற்ற அஹ்மதிகளின் உள்ளத்தில் ஒரு நொடிப்பொழுது கூட அவர்கள் சிறைப்பிடிக்கப்படுவார்கள் என்ற சிந்தனை வர முடியாது. அன்று நீதிமன்றத்தின் சார்பாகவும் அதிக எச்சரிக்கை கடைபிடிக்கப்பட்டிருந்தது. காவலும் அதிகமாக இருந்தது. காவல்துறையினரும் அதிகமாக இருந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். நீதிமன்றத்தினர் பேராசிரியரை வெளியிலேயே தடுத்து விட்டனர். ஏனெனில் அவருடைய இயல்பு கடுமையானதாக இருந்தது. பேராசிரியர் ஒரு பெரிய கல்லை ஒரு மரத்துக்கு அருகில் மறைத்து வைத்திருந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு பைத்தியக்காரர் கூச்சலிடுவதைப் போன்று அவர் மரத்தை நோக்கி ஓடினார். அங்கிருந்து கல்லை எடுத்து கண்மூடித்தனமாக நீதிமன்றத்தை நோக்கி வந்தார். ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் வழியில் அவரைத் தடுக்காவிட்டால் குற்றவியல் நடுவர் (Magistrate)-ன் தலையை அவர் உடைத்திருப்பார். குற்றவியல் நடுவர் (Magistrate) கண்டிப்பாக தண்டனை கொடுத்து விடுவார் என அவர் எண்ணினார். அந்த எண்ணத்திலேயே அவர் அவரைக் கொல்வதற்கு ஆயத்தமாகி விட்டார்.

எனவே சில நேரத்தில் சிலருடைய எதிர் விளைவு அப்படி இருக்கின்றன. பலவீனமான ஈமான் கொண்டவர்கள் முர்தத் ஆகி விடுகின்றனர். கலப்பற்ற தன்மை கொண்டவர்களுக்கு ஈமான் அதிகமாகிறது. ஆனால் பேராசிரியைப் போன்று அதிக ஆவேசம் கொண்டவர்கள், கொடூரமான இயல்பு கொண்டவர்கள் தாமே பழிவாங்குவது பற்றியும் சிந்திக்கின்றனர். **ஆனால் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனை, தர்பிய்யத், செயல்முறை ஆகியவை முன்மாதியாக இருக்கின்றன. அவற்றை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் எப்போதும் பொறுமையையும் தைரியத்தையும் கடைபிடிக்க வேண்டும்.** அல்லாஹ் வழங்கிய செய்திதான் கடைசியில் நடக்கப் போகிறது-இன்ஷா அல்லாஹ். அதன் காட்சிகளை நாம் காணவும் செய்வோம்.

சஹ்ர் சாப்பிடும் நேரத்தைப் பற்றி ஒருவருக்கு இருந்த கொள்கை பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிறகு அல்லாஹ் அவரை எவ்வாறு நல்வழிப்படுத்தினான் என்பது வியப்பிற்குரியதாகும். நம்முடைய ஜமாஅத்தில் ஒருவர் இருந்தார். அவரை மக்கள் பேராசிரியர் என்று அழைத்து வந்தனர். இப்போது அவர் இறந்து விட்டார். அல்லாஹ் அவருக்கு மன்னிப்பை வழங்குவானாக. அவர் பேசும்போது இடையிடையே நகைச்சுவைகளைக் கூறி வந்தார். அவை சிறந்தவையாகவும் இருந்தன. ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு புதிய நுட்பமான கருத்தைக் கூறுவதற்காக அவர் அவ்வாறு செய்து வந்தார். ஒருநாள் நோன்பு பற்றி பேச்சு வந்தது. அவர் கூறினார்: சஹ்ர் உணவை சற்று தாமதமாக சாப்பிட்டால் நோன்பாகாது என மவ்லவிகள், மார்க்க சட்ட அறிஞர்கள் கூறி வந்தனர். எவர் 12 மணி நேரம் பசியுடன் இருந்தாரோ அவர் ஐந்து நிமிடம் காலதாமதமாக சஹ்ர் சாப்பிட்டார் என்றல் என்ன ஆகிவிடப்போகிறது? ஆனால் மவ்லவிகள் அவருடைய நோன்பு வீணாகி விட்டது என உடனே மார்க்கத் தீர்ப்பு கொடுத்து விடுகிறார்கள்.

ஆக, அவர் இது பற்றி நன்றாக விவாதித்தார். காலையில் அவர் பதற்றமடைந்தவாறு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் வந்தார். என்ன ஆயிற்று என அவர்கள் கேட்டார்கள். நோன்பாளி சஹ்ர் உணவை சற்று காலதாமதமாக சாப்பிட்டால் அவரது நோன்பு நோன்பாகாது என மவ்லவிகள் கூறிக் கொண்டிருந்தனர். இரவு இது பற்றி வாக்குவாதம் நடந்தது; அப்போது நான், எவர் 12 மணி நேரம் 14 மணி நேரம் பசியுடன் இருந்தாரோ அவர் ஐந்து நிமிடம் சஹ்ர் உணவை காலதாமதமாக சாப்பிட்டால் என்ன குற்றம் எனக் கூறினேன். இந்த

வாக்குவாதத்திற்குப் பிறகு நான் தூங்கி விட்டேன். இரவில் ஆன்மீகக் கனவில் நூல் தொங்குவதாக் கண்டேன். அந்தக் நூலை முதலில் நான் ஒரு வாழைப்பழத்துடன் கட்டினேன். பிறகு நான் அதை இன்னொரு வாழைப்பழத்துடன் கட்டுவதற்காக எடுத்துச் சென்றேன். வாழைப்பழத்திற்கு அருகில் சென்றபோது இரண்டு விரலுக்கான இடைவெளியில் நூல் முடிந்து விட்டது. எப்படியாவது அதை வாழைப்பழத்துடன் கட்டிவிடுவதற்காக நான் அதை மீண்டும் மீண்டும் இழுத்தேன். ஆனால் வெற்றி பெற முடியவில்லை. எனது எல்லா நூலும் மண்ணில் விழுந்து வீணாகி விட்டது என நான் நினைத்தேன். எனவே இரண்டு விரல்களுக்காக எனது நூல் வீணாகி விட்டது; எனக்கு உதவி செய்வதற்காக வாருங்கள் என நான் கூச்சலிடத் தொடங்கினேன். இவ்வாறு கூச்சலிட்டவாறு நான் கண் விழித்து விட்டேன். **நான் தூங்கி எழுந்தபோது, இந்த ஆன்மீகக் கனவின் மூலமாக, இரண்டு விரல்களுக்கு இடைப்பட்ட தூரத்தில் நூல் மோசமாகிறதென்றால் நோன்பில் ஐந்து நிமிட இடைவெளி இருக்கும்போது எப்படி நோன்பு நிலைபெற முடியும் என்ற விஷயத்தை இறைவன் எனக்குப் புரிய வைத்துள்ளான் என்பதை நான் புரிந்து கொண்டேன்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெரும்பாலும் ஏதாவது சூஃபியின் கூற்றை பஞ்சாபியில் கூறி வந்தார்கள். ஒன்று, நீங்கள் ஒருவரை நன்றாக பற்றிப் பிடித்திருங்கள்.அல்லது ஒருவர் உங்களை நன்றாக (கருணையால்) போர்த்தி இருக்கட்டும். அதாவது **இவ்வுலக வாழ்க்கை எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறதென்றால், ஒன்று நீங்கள் யாருக்காவது ஆகி விட வேண்டும்; அல்லது எவராவது உங்களுக்காக ஆகி விட வேண்டும். இதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை.** இந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டியவாறே அல்லாஹ், *கலகல் இன்ஸான மின் அலக்* எனக் கூறியிருக்கிறான். அதாவது மனிதனுடைய இயல்பில் நாம் எத்தகைய பண்பை வைத்திருக்கிறோம் என்றால், அவர் யாருக்காவது ஆகி விட விரும்புகிறார். அது இல்லாமல் அவருடைய உள்ளம் ஆறுதல் அடைவதில்லை. எதன் மூலம் உலகம் மார்க்கம் ஆகிய இரண்டும் கிடைக்குமோ அதுவே ஒருவருக்காக ஆகி விடுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும். மனிதன் அல்லாஹ்வுக்காக ஆகிவிட வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, அன்பின் தகுதி மற்றும் அல்லாஹ்வுடன் தொடர்பு ஆகியவற்றைப் பற்றி ஓர் உதாரணம் கூறியவாறு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அந்த உதாரணம் ஒரு பைத்தியக்காரருடையதுதான். அவர் தற்போது மரணமடைந்துவிட்டார். அவர் எனக்கு ஆசிரியராகவும் இருந்தவராவார். எப்படி இருப்பினும், அதிலிருந்து அன்பின் நிலை பற்றிய உதாரணம் முற்றிலும் தெளிவாகி விடுகிறது. எனது ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுத்து வந்தார். பின்னர் அவர் நுபுவ்வத்திற்கான வாதமும் செய்து விட்டார். அவர் பெயர் யார் முஹம்மது ஆகும். அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எத்தகைய அன்பு இருந்ததென்றால், அதன் விளைவாகவே அவருக்கு பைத்தியத்தின் நிலை மேலோங்கி விட்டது. அதற்கு முன்பும் அவருடைய மூளையில் ஏதாவது குறைபாடு இருந்திருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அவருக்கு இருந்த அன்பின் காரணமாகவே அவருக்கு பைத்தியமாகி விட்டது என்றே நாங்கள் கண்டோம். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எல்லா முன்னறிவிப்புகளையும் தன்னுடன் தொடர்புபடுத்திக் கூறினார். பிறகு அவருடைய பைத்தியம் எந்த அளவுக்கு அதிகமாகி விட்டதென்றால், அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நெருக்கமாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சில நேரத்தில் ஆகுமானதல்லாத, பொருத்தமற்ற செயல்களையும் செய்து வந்தார். உதாரணமாக, **அவர் தொழுகையிலேயே**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உடலில் தனது கையை தடவ முயற்சி செய்தார்.** அவருடைய இந்த நிலைமையைப் பார்த்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமக்கு தலை வலி ஏற்படும்போது அவர் ஏதும் பின்னால் அமர்ந்திருக்காமல் பார்த்துக் கொள்வதற்காக சில நபர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பழக்கம் என்னவென்றால், அவர்கள் பேசும்போது அல்லது சொற்பொழிவாற்றும்போது ஒருவர் தனது கையை அமைதியாக அடிப்பது போன்று தொடையின் பக்கம் கொண்டு வருவார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கையை அசைக்கும்போது மவ்லவி யார் முஹம்மது சாஹிப் அன்பின் உணர்ச்சியால் உடனே குதித்தெழுந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருகில் சென்று விடுவார்.** மவ்லவி சாஹிப்! இது என்ன வேலை செய்தீர்கள் என யாராவது அவரிடம் கேட்டால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னை சைகையாக அழைத்தார்கள் எனக் கூறுவார்.

ஆக, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு, அன்பிற்குரியவர் எண்ணம் கொள்ளாமல் அசைக்கும் கையையும் தன்னை அருகில் அழைப்பதாகக் கருதும் இதுஅளவு கடந்த அன்பு மற்றும் பைத்தியத்தின் நிலையாகும். ஆனால் நாம் அல்லாஹ்வை நேசிப்பதாக வாதிடுகின்றோம். ஆனால் தொழுகையின் பக்கம் வாருங்கள்; வெற்றியின் பக்கம் வாருங்கள் என்ற அவனுடைய தெளிவான அறிவிப்பு இருந்தும் தொழுகைகளின் பக்கம் ஓடி வருவதில்லை; ஜுமுஆக்களுக்கு முறைப்படி தொடர்ந்து வருவதில்லை.

எனவே இதன் பக்கம் ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் தெளிவான அழைப்புக்கு செவிசாய்த்தவாறு அந்த நேசிக்கின்றவரைப் போன்று, ஈர்க்கப்பட்டவரைப் போன்று தாவிச் செல்ல வேண்டும். மேலும் பள்ளிவாயிலை நிரப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். இப்போது விடுமுறையாகும். பெற்றோர் குழந்தைகளையும் அழைத்து வருகின்றனர். பிறகு படிப்படியாக வருகை குறைந்து விட ஆரம்பித்து விடுகிறது. எனவே நினைவூட்டிக் கொண்டும் இருக்கிறேன். நாம் நமது தொழுகைகளைப் பாதுகாப்பதற்கான, அதற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**